மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அது திருப்பி அளிக்கப்பட்டு விட்டது என்று எனக்குத் தகவல் சொல்லப்பட்டு இருக்கிறது. தனியார் பள்ளிகளிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த வைப்பு நிதியை ரீஜினல் பிராவிடன்ட் பண்ட் கமிஷனர்தான் தரவேண்டும். அது நம் நிர்வாகத்தின்கீழ் வரவில்லை. பள்ளி நிர்வாகத்திலே உள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்கிறார்கள். நாமும் கூட அதுகுறித்து கேட்டுக்கொள்ளலாம்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர் ஆர். சி. நிர்மலா உயர்நிலைப் பள்ளியில் உள்ளவர்கள் இதற்காக விண்ணப்பித்து 2, 3 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதை உடனடியாக வழங்குமாறு உத்திரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, கொடுபட வேண்டிய இந்த 'அட்டா' பணம் அனைத்தும் தமிழக அரசுத் தரப்பிலிருக்கின்ற பள்ளிகளிலே கொடுக்கப்பட்டுவிட்டது, தனியார் பள்ளிகளிலேதான் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் பள்ளிகளிலே கொடுக்கப்படாமல் இருப்பதால்தான் அந்த ஆசிரியர்கள் அரசுக்கு விண்ணப்பிக்கிறார்கள். நாம் பள்ளிகளுக்கு மானியம் கொடுக்கிறபோது இந்தப் பிரச்சினையைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்த முறையிலே அது வழங்கப்படுவதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு, தான் கொடுக்கிற கிராண்டிலே எதுவும் தருவதற்கு இல்லை. ஆனால் அதைத் தரவேண்டியவர் ரீஜினல் பிராவிடன்ட் பண்ட் கமிஷனர் தான். நாம் வேண்டுமென்றால் அவருக்குக் கடிதம் எழுதி சீக்கிரமாகத் தரப்படுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

Administration of Law Colleges.

* Q. 286—Thiru S. ANDITHEVAR: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the Government have received any communication from the Bar Council to the effect that none of the Law Colleges follow the norms prescribed regarding the legal education, regarding the construction of buildings, staff, strength and atendance of students; and

1982 மார்ச் 1]

(b) if it, a fact that the Bar Council has stated that the Degree is likely to be de-recognised if the norms are not followed ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது 'ஆம்' என்று சொன்னார்கள். சட்டக் கல்லூரி மதுரை, கோவை, திருச்சி போன்ற இடங்களிலே ஆரம்பிக்கப்படுகிறபோது கல்லூரி அமைப்பு விதிகளின்கீழ் அவை இல்லை என்று பார் கவுன்சில் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அதன் காரணமாக அங்கே படித்துப் பட்டம்பெறுகிற மாணவர்களுக்குக்கூட பட்டம் வழங்கப்படவில்லையென்பது உண்மையா என்றால் அதற்கும் 'ஆம்' என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தக் கல்லூரிகளிலே படித்தவர்களுக்குப் பட்டம் வழங்கப்படவில்லையென்றால் அவர்கள் வழக்காட முடியாது என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைத் திருத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வழக்கறிஞர் மன்றம் அபிலியேஷனைத் திரும்பப் பெறக்கூடும் என்ற எச்சரிக்கையைச் செய்திருக்கிறார்கள். நாம் புதிதாக கல்லூரிகளை ஆரம்பிக்கிறபோது சில ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாணவர்-ஆசிரியர் விகிதம், முதல்வர்கள் நியமனம், நூலகங்கள் அமைத்தல், மாணவர்களுடைய வருகை ஆகிய இந்த நான்கு கருத்துக்களைச் சொன்னார்கள். இவைகளை நிவர்த்திப்பதற்காக நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சட்டக் கல்லூரிகளிலே கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்பதற்கான கருத்துரு வந்து இருக்கிறது. நிதித் துறையைக் கலந்துகொண்டு அதுபற்றி முடிவு எடுக்கப்படும். தமிழகத்திலே உள்ள நான்கு கல்லூரிகளிலும் முதல்வர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். திருச்சி, கோவை ஆகிய இடங்களிலே உள்ள கல்லூரிகளிலே உள்ள நூலகங்கள் ஒவ்வொன்றுக்கும் புத்தகங்கள் வாங்குவதற்காக 25 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது. சட்டக் கல்வி இயக்குநர் மாணவர்கள் வருகை வழக்கறிஞர் மன்ற விதிகளுக்கு உட்பட்டு இருக்கிறது என்று கூறியுள்ளார். தமிழக வழக்கறிஞர் மன்றத் தலைவருக்கு 2—5—1981 அன்றே கடிதம் எழுதப்பட்டு இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி அமைப்பு விதிகளின்படி கட்டட வசதிகள், ஆசிரியர்கள் நியமனம், நூலக வசதிகள் இவைகள் இருந்தால்தான் வழங்கப்

படும் என்று சொன்னார்கள். அதற்கு மேலும் கூட இன்றைக்கும் அந்தக் குறைபாடுகள் தீர்க்கப்படவில்லை என்ற நிலை தான் இருக்கிறது. மதுரை சட்டக் கல்லூரியில் இந்தக் குறைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அது தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் பேராசியர்கள் தகுதியான வர்கள் நியமிக்கப்படவில்லை. அதன் காரணத்தினால் அங்கீ காரம் கொடுக்கப்படாது என்றால் அங்கேபடித்த இத்தனை மாணவர்களுடைய நிலை என்ன ஆகும் என்பதை அரசு ஆராய்ந் ததா? உடனடியாக அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஏற்கெனவே எடுக்கப் பட்ட நடவடிக்கை பற்றித்தான் நான் சொன்னேன். மேலும் குறைகளைப் போக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். வழக்கறிஞர் மன்றம் சொல்லி இருக்கின்ற கருத்துரைகளைப் பரி சீலனை செய்து தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இது வெறும் சட்டக் கல்லூரிதான்; அப்படியொன்றும் நம்மால் தீர்க்க முடியாத பெரிய பிரச்னை எதுவும் இதில் இல்லை. எஞ் ஜினியரிங் கல்லூரி போன்றோ, மருத்துவக் கல்லூரி போன்றோ சட்டக் கல்லூரி பெரிய பிரச்னைக்குரியது அல்ல; சுலபமாக இதைத் தீர்த்து விடலாம்.

திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, சில குறைபாடு களுடைய கல்லூரிகளுக்கு வந்து படித்துப் பட்டம் பெறுகின்றவர் களுடைய பட்டமே தரத்தில் குறைந்திருக்கும் என்று பார் கவுன் சில் கருதுவது போன்ற ஒரு கருத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியில் இருந்து தெரிகிறது. அப்படியென்றால் கரஸ்பான்டென்ஸ் கோர்ஸ் என்ற முறையில், கல்லூரிக்கே செல் லாமல், தபால் மூலம் படித்துப் பட்டம் பெறுகின்றவர்களை அங்கீ கரிப்பதைப் பார் கவுன்சில் ஆட்சேபித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டக் கல்லூரி படிப்பு தொழில் சம்பந்தப் பட்டதாக இருப்பதால் அவர்கள் அஞ்சல் வழிப் பட்டதாரி களையும் ஆதரிப்பதில்லை; மாலைநேர வகுப்புகளையும் ஆத ரிப்பதில்லை. ஆகவே, அவைகளுக்கெல்லாம் இருந்த மாலை நேர வகுப்புகளையும்கூட நாம் நிறுத்திவிட்டோம். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் முறையாகப் படித்து, சட்டப்படி அந்தத் தொழிலில் அவர்கள் போய்ச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அதற்குத் தக்க நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.